புதிய அவையம்
PUTHIYA AVAIYAM (PEER- REVIEWED JOURNAL)
ISSN : 2456-821X
(vol. 9 Issue: 01 June 2025)

==================================================================

# சமக்கால இலக்கியத்தில் மாலதி மைத்ரி படைப்புகளில் பெண்ணிய சிந்தனை

==================================================================

**ஆய்வாளர்**
ஆய்வாளர் சே,நிர்மலா.
முழு நேர முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை,சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி ,
வி,ஐ டி பல்கலைக்கழகம். வேலூர்.
**நெறியாளர்**
முனைவர் அ மரிய.செபஸ்தியான்,உதவிப்பேராசியர் ,
சமூக அறிவியல் மற்றும் மொழிகள் பள்ளி,
வி,ஐ டி பல்கலைக்கழகம்.
வேலூர்.

**ஆய்வுசுருக்கம்**

இலக்கியங்கள் பெண்களை உயர்த்தும் விதமாக பல கவிஞர்களால் எழுதப்படுகின்றன. இக்காலத்தில் சமுதாய சிக்கலின் பிரதிபலிக்கும் கண்ணாடியாக இலக்கிய கவிதைகள் மனிதர்களிடத்து ஓர் உணர்வை தூண்டுகின்றன. பெண்ணியவாதி கவிஞராக மாலதி மைத்ரி கவிதைகளில் பெண்களுக்கு ஏற்படும் பாலின பிரச்சனைகளை கருப்பொருளாக கொண்டு அதற்கான ஒரு தூணாக அவர் கவிதைகளின் முலம் உணர்வை திடகாத்திரமாக படைத்துள்ளார். இவர் சமகால இலக்கியத்தில் சிறந்த கவிஞராக அங்கிகரிக்கப்பட்டார். கவிஞர் மாலதி அவர்கள் 1968 ஆம் ஆண்டு இந்திய ஒன்றிய பகுதியான புதுச்சேரியில் மீனவர் குடும்பத்தில் பிறந்தார். சல்மா மற்றும் சுகிர்தராணி போன்ற பல தமிழ் பெண் எழுத்தாளர்களை போலவே 2000களில் முற்பகுதிகளில் இவர் பிரபலமடைந்தார். அவர் புதுச்சேரி அரசுவிருது, திருப்பூர் தமிழ்ச்சங்க விருது மற்றும் கவிதைக்கான மாநில விருது ஆகியவற்றைப் பெற்றுள்ளார். இவர் பெண்களுக்காக தமிழியில் பெண்ணிய முதல் பதிப்பகம் அணங்கு பதிப்பகம் உருவாக்கினார். சமூகம், அரசியல், பொருளாதாரம் ஆகிய தளங்களில் பெண்களுக்கான சம உரிமையை மீட்டெடுக்கப் போராடுவதே பெண்ணியவாதிகளின் இலக்கு எனலாம் பல பெண் கவிஞர்கள் பல வழிகளில் பல போராட்டங்களை பெண்களுக்காக முன்னெடுத்துச் சென்றிருந்தாலும் மைத்ரி தனக்கான வழியாக இலக்கியத்தை தேர்ந்தெடுத்து பெண்களின் இருப்பு, பலவிதமான பரிமானங்களை வெளிப்படுத்தினார். பெண்களுக்கான உரிமையை மீட்டெடுப்பதில் முக்கிய பங்காற்றினார். இவரின் கவிதைகள் பெண்ணிய சிந்தனைகளில் பெண் முன்னேற்றத்திகான ஒடுக்குமுறைக்கு எதிரான கோபம் நிறந்தவை. இவர் முற்போக்கான சிந்தனை எழுத்தாளர் பெண் உடல், வறுமை, இடம்பெயர்வோர், சமூக சிக்கல்கள், ஒடுக்குமுறைக்கு எதிரான கோபம் போன்றவை இவரது படைப்புகளில் வெளிக்காட்டி இருப்பதை எடுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**பெண்ணியம்**

பெண்ணியம் குறிக்கும்**(femina)** ஃபெமினா என்ற இலத்தீன் மொழி சொல்லில் இருந்து தோன்றி ஆங்கில மொழியில் பெமினிசம் என்ற சொல்லுக்கு இணையாக பெண்ணியம் என்னும் சொல் வழங்கப்பட்டு வருகிறது. "பெமினிசம்" என்ற சொல்லிற்க்குத் தமிழில் பெண்ணியம், பெண்ணிலை வாதம், பெண்ணிலை ஏற்பு, மகளிர், பெண்ணிலைக் கொள்கை என்று பல சொற்கள் வழங்கப்படுகின்றன. **(இரா. ரங்கம்மாள் மற்றும் சி.வாசுகி பெண்ணிய அணுகுமுறை இலக்கியப் பயன்பாடும். ப7)** என்று பெமினிசம் என்ற சொல்லுக்குப் பல சொற்கள் இருப்பதை "பிரேமா" குறிப்பிடுகின்றார். சமூகத்திலும், வேலைத்தளத்திலும், குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலையையும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் இருக்கும் உணர்வு பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தை பற்றி "தேவதந்தா" கூறுகின்றார். சாதி, மதம், மொழி, அரசியல், பண்பாடு, பொருளாதார போன்ற சமூகக் காரணிகளால் பெண்களுக்கு ஏற்படும் சிக்கலை கண்டறிந்து சம நிலையான சமூகம் முயற்ச்சியை பெண்ணியம் எனலாம் என்று **வி. ஈ .சுவரன்** கூறுகிறார். பெண்ணியம் என்பது பெண்ணின் சமூக நிலையை சிந்தனைக்கு உட்படுத்த வேண்டிய தேவையாகின்றது. இது பாலினம் பாகுபாடு தொடர்பான சமூகப்பண்பாட்டு வேர்களை இனம் கண்டுகொள்ளவும், பெண்களுக்கு எதிரான அடக்கமுறை, சுரண்டல் முறையை உணர்ந்து கொள்ளவும் அல்லது பெண்கள் சார்பாக ஒழுங்கமைக்கப்பட்ட செயல்பாடாகும். இதன் ஆணியாக பண்பாடு கட்டமைப்பில் பாலினம் உருவாக்கம் ஊடுருவியிருப்பதையும் அதனால் பழைய மதீப்பீடுகள் புதிய பண்பாட்டு மதீப்பீடுகளாக எத்தகைய சிந்தனை மாற்றத்தைப் பெறுகின்றன என்பதை நன்கு அறிய உதவுகின்றது. பெண்களுக்கு ஏற்படும் சிக்கல்களின் அடிப்படையிலும் அதற்கெதிராகத் தீர்வுகாணும் உணர்வுகளின் அடிப்படையிலும் தோன்றுகின்ற சிந்தனையானது நாளடைவில் உருப்பெற்று கொள்கைகளாக தொடங்குகின்றன. பெண்களின் சிக்கலுக்கு தீர்வுகாணும் விதமாக பல கொள்கைகள் உருவாகி பெண்ணிய சிந்தனையாக மலர்ந்தன. பெண்களுக்கு ஆதாரமாக பல சட்டங்கள் போட்டாலும் மக்கள் எண்ணங்களில் விழிப்புணர்வு இல்லை என்றால் பெண்ணியத்தை பேணி காப்பது மிகவும் கடினம். பாரதியாரின் கவிதைகளில் ''ஆணும் பெண்ணும் நிகரெனக் கொள்வதால் அறிவிலோங்கு இவ்வையம் தழைக்குமாம்''(பா-213) தங்களின் படைப்புகளின் மூலம் சம உரிமை வளர்த்து பேணிகாத்தார்கள். இதனால் பாலின அடையாளத்தை அழிக்கும் முயற்சியை மைத்ரி கவிதைகளில் வெளிப்படுத்துகிறார்.

**குடும்ப வன்முறை**

சமுதாய உலகில் பெண்கள் அனைவரும் ஒருவரை துணைக் கொண்டு வாழ்க்கையானது அமைகிறது. அவற்றில் பொருளாதாரத்தில் பலமிழந்து நிற்கும் பெண்கள் ஆண்களையே நம்பி இருக்கின்றனர். தாம் குடும்பத்திற்காகவும், குழந்தைகளுக்காகவும் குடும்ப வருமையை உணர்ந்து தான் உழைத்து பெரும் பகுதியை செலவு செய்கின்றனர் பெண்கள். பெண்களின் பெரும் பிரச்சனையாக குடும்ப வன்முறையை, ஆணாதிக்கம் போன்ற பெண்கள் அடிமையாக அமைகின்றன. இதற்கான குரலாக பாரதியார் பாடல்களில் பெண் விடுதலை உணர்வே அதிகமாகக் காணப்பட்டது. இவர் வாழ்ந்த காலத்தில் பெண் அடிமை நிலையினைக் கண்டு

**"மாதர் தம்மை இழிவு செய்யும்**

**மடமையைக் கொளுத்துவோம்**

**--------------------------------------------------------**

**ஆண்களோடு பெண்களும்**

**சரி நிகர் சவமானமாக வாழ்வ மிகுந்த நாட்டிலே"**

**(பாரதி -சுந்தரம் ;3)**

ஆண்களும் பெண்களும் சமமாக வாழ வேண்டும் என்று இப்பாடல் வரிகளில் காணமுடிகிறது. அவர் கனவில் "வீட்டுக்குள்ளேயே பெண்ணைப் பூட்டி பூட்டி வைக்கும் விந்தை மனிதர் தலை கவிழ்ந்தார்" என்று நிலை உருவாக நினைத்தார். இதனை உணர்த்தும் விதமாக கடவுளர் இவ்வுலகிற்கு விதிவிலக்கு இல்லை.

**திருமால்; சிம்மவாஷினியோ உனக்கு அதிகாரம் இல்லாமலா?**

**நீ சிவனின் ஒரு பாதி அதுவும் சரிபாதி ஆயிற்றே!**

இதன் கருத்து கணவனும் மனைவியும் ஒருவர் என்றாலும் கணவன் பார்வையில் மனைவி என்பவள் ஒருபடி கிழே முட்டாள்களாக இருக்க வேண்டும் என்று ஆடவர் விரும்புகின்றார் என்பதை ஆண் வருக்கத்தை அனைவரையும் கூறமுடியாது. "கொலைகாரனாக, திருடனாக, குடிகாரனாக, துரோகி, மோசடிக்காரன், ஊழல் செய்பவன், ஏமாற்றுபவன், விபச்சாரம், கொடுங்கோலன், காம வெறியன், சாதி வெறியன், மதவெறியன், இன வெறியன் இவர்கள் அனைவரையும் குடும்ப நபர்கள் கைவிடுவதில்லை என்று **வீடுகளால் ஆன இனம்** என்ற கவிதையில் மாலதி மைத்ரி பெண்ணடிமை பொறுத்தாலும் நிலை உண்டாகிறது என்று எடுத்துரைகிறார்.

**"ஊரின் அனைத்து வீடுகளும்**

**நடப்பட்ட பெண்களென நிற்கின்றன**

**சாளரங்கள் கண்களாகவம் வாசல் யோனியாகவும்**

**யாரோ ஒரு ஆணிற்காக**

**ஆயுள் முழுவதும் காத்துக் கிடக்கின்றன"**

பெண் என்பவள் எந்நிலை தவறினாலும் தன் குடும்பத்தின் அடிமைப்பட்டு இருந்தாலும் தன் கடமை உணர்ந்தவர்களாக காணப்படுகின்றன.

**காதல் இழப்பின் பெண்ணிய சிந்தனை**

பூமியில் தோன்றிய உயிரினங்களின் அனைத்திற்கும் காதல் என்பது உன்னதமான உயர்வு உணர்வும் வரலாற்றின் பக்கங்களை வண்ணமயமாக மாற்றியதில் காதலுக்கு கணிசமான பங்கு உண்டு. உலகம் தோன்றிய காலம்தொட்டு இன்று வரை காதல் தீண்டாமல் அவரவர் வாழ்க்கையை தாண்டியவர்கள் சிலரே. இதில் ஒருபுறம் இன்பம் தழுவிய இல்லறமாக அமைந்து அந்த இல்லறமே சிலருக்கு துன்பம் தரக்கூடிய காதலால் விழையையும் பிரிவின் நிலைகளை காண முடிகிறது.

**"நசைபெரி துடையார் நல்கலு நல்குவர்**

**பிடிபசி கிளைஇய பெருங்கை வேழம்" ( குறுந்தொகை )**

காதல் பிரிவின் நிலைக்கண்டு வருந்தும் காதலியை தோழி என்பவள் தலைவி வருந்தாமல் இருக்க யானைகளின் காதலோடு ஒப்பிட்டு அழகாக எடுத்துரைக்கிறாள். இன்றளவும் நிலையான மாற்றம் பெறாமல் பிரிவுவால் பலரும் புறம் கூறினாலும் தலைவியை தேற்றுபவள் உண்மையான தோழியாவாள் இதற்கான ஒரு பலமாக வெள்ளிவீதியார் சங்க இலக்கியத்தில் பாடியுள்ளார்.

**"கணை இருங் கங்குலூம் கண் படையினாலே**

**அதனால் தான் என்னோடு பெருங்கொல் இவ்வுலகம்**

**உலகமொடு பொருங்கொல் என் அவலம்உறு நெஞ்சே"**

**(நற்-348)**

தலைவன் பிரிவால் ஊரே புறம் பேசும் என்பதை நினைத்து நல்லிரவில் தூக்கம் வரவில்லை என்று அதனால் அவள் மனம் உலகத்தோடு சண்டை போடுகிறது அன்று நிகிழ்ந்த நிலையானது இக்காலத்திலும் கணவன், மனைவி என்றால் ஊரே புறம் பேசும் என்பதே மாலதி மைத்ரி அவர்கள் **உண்மை கதை** என்னும் கவிதையில் உணர்வை வெளிப்படுத்தினார்.

**" நம் உறவின் பாலங்கள்**
**என்னிடம் ஒன்றைபடையாகவும்**
**உன்னிடம் இரட்டைப்படையாகவும்**
**பிரிந்து விட**
**என் கதை முளுமை என நானும்**
**உன் கதை முளுமை என நீயும்**
**சொல்லித் தெரிய**
**கேட்பவரின் வாயிலிருந்து**
**கோழையாய் விழியும் வரிகள்**
**உண்மை கதைகளாய் அச்சேறு**
**ஊரெங்கும் விற்பனையாகிறது".**

காதலின் இழப்பில் நிலைகளில் ஊரார் புறம் கூறும் நிலை எக்காலம் மாற்றம் அடையாத நிலையில் மைத்ரி சிந்தனையில் காணப்படுகிறது.

**கற்பு நெறியில் பெண்ணிய சிந்தனை**

சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை பெண்களுக்கும் ஆண்களுக்கும் கற்பு நிலையை எடுத்துரைத்தாலும் பெண்களிடையே கட்டுப்பாடுகள் அதிகம் இருக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகின்றன. பெண் என்பவள் பாதுகாக்கப்படுபவள், சொன்னதைக் கேட்பவள், படுக்கை சுகம் தருபவள், பிள்ளைகளுடன் வாழ்பவள், வீட்டை பேணுபவள், தாய் என்னும் தெய்வம் உருவம் உடையவள் போன்ற தன்மையை அழிக்கவே பெண் படைப்பாளிகளின் படைப்புகளில் சிரமப்பட்டார்கள் இதனை உணர்த்து சங்கம் இலக்கியத்தின் பாடல்கள் கற்புடைய மடந்தை தன்புறம். புல்ல, **(புறம் 383)**

**"நான் அலது இல்லாக் கற்பின் வாள்நதல் புறம்(196;13)**

**திருநகர் அடங்கிய மாசு இல் கற்பின் அகம்(:144;13)**

**மாசு இல் கற்பின் மடவோள் குழவி நற்( 15:7)**

போன்ற பாடல்களில் காண முடிகிறது. மைத்ரி அவர்களின் **அசல் அசைவம்** என்னும் கவிதையில் ஆண் பெண் முத்தங்களுக்கு இடையேயான வேறுபாடுகளை வெளிப்படுத்துகிறார்.

**"பெண் முத்தம்**

**துடிக்கும் இறாலை உயிராய் உரித்துண்பது**

**பதினீயுடன்**

**ஆண் முத்தம்**

**பச்சை கனவாய் மீனை**

**பற்கடிப்படாமல் பனங்கள்ளுடன் சுவைப்பது"**

போன்ற கவிதைகள் மூலம் வெளிப்படையாக நம்மால் அறிந்துக்கொள்ள முடிகிறது.

**சமூகத்தில் பெண்ணிய சிந்தனை**

மனிதன் நாளுக்கு நாள் வளர்ச்சியடைந்து சுயலுக்கு ஏற்ப தான் வாழ்க்கையை மாற்றிக்கொள்ளவும். அவற்றில் மாறாத சமூகத்தினர் சாதியை மையமாகக் கொண்டனர் சமூகத்தில் பல பிரச்சனைகள் பல பிரிவுகள் எழுந்த போதிலும் இதில் முதன்மையாக சமூகத்தில் சாதியை ஏற்றத்தாழ்வுகளாக காணப்படுகின்றன. பெண்ணிய வாதிகள் பெண்ணியத்தினை சாதி எல்லைகளைக் கடக்க சிந்தனை செய்தனர். தொல்காப்பியத்தில் கூறும் சங்க கால சமூகம் தொழில் செய்யும் நிலையைக் கொண்டு பிரிவானது இருந்தது. இதில் உயர் நிலையினர் என சமூகம் பிரிவினர் உயர்நிலை அந்தணர், வணிகர், வேளாளர் ஆகியோர் தாழ் நிலையினர் சமூகமாக உழவர்கள், வேடர்கள், படை ஆட்சியர், மீனவர், உமணர், பொற்கொல்லர், நேசவர், தச்சர், பரத்தையர் முதலியார் முதலானோர் சங்க இலக்கியத்தின் தெளிவாக தெரிவிக்கின்றன.

**"ஆயுள் காலை அந்தணர்க்குரிய" (தொல்- மரபு-625)**
**"வேளாண் மாந்தர்க்கு உழுசாயல்லது இல்லெனமொழிப"**
**(தொல்- மரபு-635)**

**" அந்தணர் என்போர் அறவோர் மற்றவர்களுக்குச்**
**செந்தன்மை பூண்டு ஒழுகலான்" (குறள்-30)**

அந்தணர்கள் உயர்ந்தோர் என்று வள்ளுவரும் தன் குறளில் சுட்டிக்காட்டினார். தமிழ்நாட்டில் பிராமணர்கள் என்று அழைக்கப்படுபவர்கள் அந்தணர்களின் பெரும்பாலானவர்கள் தமிழ்நாட்டுச் சுதேசிகள். இதுபோன்ற ஏற்றத்தாழ்வுகள் சங்கம் தொடங்கி இன்றளவும் நிகழ்கின்றனர் என்று மாலதி மைத்ரி தன் சிறுமியாய் இருந்த காலத்தில் இருந்ததாய் சொல்கின்றார் அவர் **படுகளம்** என்ற கவிதை படைப்பில் வெளிப்படுத்தினார்.

**"தெரு வாசலில் வெளிச்ச**
**சட்டத்துக்கு அப்பால் நின்று**
**குரலெடுப்போம்**
**அம்மா அன்னம் போடுங்க**
**கூடப் பிடிக்கும் பொடுசுகள்**
**எட்டிப் பார்த்துவிட்டுச் செல்லும்**
**ஏகாளி வந்திருக்காங்கமா**
**அம்பட்டவன் வந்திருக்காங்கமா**
**தொட்டி வந்திருக்காங்கமா**
**சக்கிலி வந்து இருக்காங்கமா**
**குடிப்புள்ள வந்திருக்காங்கமா"**

என்று கூறும் நிலை மாறி அமைந்த காலமாக இருக்கின்றது. இன்றைய காலத்தில் சாதியானது சிறிதளவு அழிந்து இருந்தாலும் இவ்வாறாக அழைக்கும் பழக்கம் இல்லாமல் போய்யிற்று.

**முடிவுரை**

மாலதி மைத்திரி படைப்புகளில் மூலம் இக்காலகட்டத்தில் பெண்ணிய நிலையை அறிந்து கொள்ள முடிகிறது. இக்காலப் பெண் படைப்பாளர்களின் படைப்புகளில் ஒன்றான மாலதி மைத்ரி

அவர்களின் படைப்பில் சமூதாய சிக்கங்களில் பெண் என்பவள் யார் பெண்ணின் நிலை என்ன பெண்கள் எவ்வாறு மாற்றம் அடைய வேண்டும் என்ற சிந்தனையில் பல கவிதை படைப்புகளை படைத்துள்ளதை காண முடிகிறது.

**பார்வை நூல்கள்**


1. **மாலதி மைத்ரி கவிதைகள்**
2. **முனைவர் இரா.பரேமா. பெண்ணியம் உலக தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் டி.டி.டி.ஐ (அஞ்சல்) தரமணி.சென்னை -**600113
3. **பாரதியார், பாரதியார் கவிதைகள், பாரதியார் பதிப்பகம் சென்னை**
4. **தொல்காப்பியம் பொருளதிகாரம்- இளம்பூரனார் உரையுடன் -சைவ சித்தாந்த நூற்பதிப்பகம் கழகம் லிமிடெட் சென்னை-** 1
5. **திருக்குறள் புத்தகம்**